வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.களண் 3865/ஆ4/2023 நாள் 27.03.2024

பொருள் தேர்வுப் பணி– வேலூர் மாவட்டம் மார்ச்– 2024 நடைபெற்று முடிந்த மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வு விடைத் தாள் திருத்தும் முகாம் – குடியாத்தம், நடுப்பேட்டைஅரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் வேலூர் சிருஷ்டி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 02.04.2024 முதல் நடைபெறும் விடைத்தாள் திருத்தும் பணிக்கு அனைத்து பாட முதுகலை ஆசிரியர்களை உரிய தேதியில் முகாமிற்கு விடுவித்து அனுப்புமாறு தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை அரசு தேர்வுகள் இயக்குநரின் மின்னஞ்சல் நாள் 20.04.2023

பார்வையில் காணும் அரசு தேர்வுகள் இயக்கக கடிதத்தின் படி, வேலூர் மாவட்டம் , குடியாத்தம், நடுப்பேட்டைஅரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் வேலூர் சிருஷ்டி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 02.04.2024 முதல் நடைபெறவுள்ள மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டிற்குரிய பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி மேற்கொள்ளவுள்ளதால் அனைத்து பாட முதுகலை ஆசிரியர்களையும் உரிய தேதியில் விடுவித்து அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விடைத்தாள் திருத்தும் பணிக்கு விலக்கு அளிக்க கோரும் எவ்வித கோரிக்கையினையும் ஏற்க இயலாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

கண்பார்வையற்றோர் தவிர ஏனைய ஆசிரியர்கள் அனைவரையும் மேற்காண் தேதியில் முகாமில் கலந்து கொள்ள ஏதுவாக விடுவித்து அனுப்புமாறு அனைத்து அரசு/ ஆதி திராவிட /அரசு உதவிபெறும்/ நகரவை மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு மீள தெரிவிக்கலாகிறது.

//ஒம். செ.மணிமொழி //
முதன்மைக்கல்வி அலுவலர்
வேலூர்

**பெறுநர்**
தலைமைஆசிரியர்கள் / முதல்வர்கள்
அரசு/ அரசு உதவிபெறும்/ நகரவை / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள்.
வேலூர் மாவட்டம்.
**நகல் –**

**1.** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

2.முகாம் அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி ) தகவலுக்காக அனுப்பலாகிறது.